CC.// 563 /2024

PW – 10

பெயர்: சீதாலெட்சுமி

தேதி: 14.10.2024

1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

கிருஷ்ணன், அந்தோணிராஜ், செல்வராஜ், ஜோசப் ராஜ், பூங்கொடி சூசை, அருமைகிளி, டேவிட் அமல்ராஜ், பாலமுருகன், செல்வராணி ஆகியோர்களில் யார் எல்லாம் மாயவன் கோவில் வரிதாரர்கள் என்றால் அது எனக்கு தெரியாது. மாயவன் கோவில் வரிதாரர்கள் யார் எல்லாம் என்று எனக்கு தெரியாது. என் வீடு மேற்கு தள்ளி உள்ளது. நான் மாயவன் கோவில் வரித்தாரரா என்றால் இல்லை. அந்தோணிராஜ் என்பவரின் தகப்பனார் பெயர் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அருமைக்கிளி என்பவரின் கணவர் பெயர் எனக்கு தெரியாது என்றால் சரிதான். டேவிட் அமல்ராஜ் என்பவரின் தகப்பனார் பெயர் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பாலமுருகனின் என்பவரின் தகப்பனார் பெயர் எனக்கு தெரியாது என்றால் சரிதான். செல்வராணி என்பவரின் கணவர் பெயர் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆள்களை பார்த்தால்தான் எனக்கு தெரியும். பூங்கொடி சூசை ஆணா பெண்ணா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். காவல்நிலையத்தில் நான் புகாரை நான் படித்து பார்த்தேனா என்றால் எனக்கு படிக்க தெரியாது எனது மகன் படித்து பார்த்தான். நான் அந்த புகாரில் கையொப்பம் செய்தேன் என்றால் நான் கையொப்பம் செய்யவில்லை. அந்த புகாரில் யார் கையொப்பம் செய்தார் என்றால் கிருஷ்ணன், அந்தோணிராஜ் கையொப்பம் செய்தார்கள் மற்றொரு தாத்தா கையொப்பம் செய்தார். அவர் பெயர் மறந்துவிட்டது. அந்த புகாரில் என்னுடைய பெயர் இருந்ததா என்றால் நான் சீட்டு போட்டதால் என்னுடைய பெயரும் இருக்கும். அந்த புகாரில் நான் ரூ.33000 சீட்டில் 72 வாரமும், ரூ.50000 சீட்டில் 42 வாரமும், ரூ.60000 சீட்டில் 38 வாரங்களும் செலுத்தி இருந்ததாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் ஆமாம்.

என்னுடைய பெயர் சீதாராமலட்சுமி இல்லை என்றால் சரிதான். சீதாலட்சுமி.

அந்த புகாரில் சீதாலட்சுமி கணவர் பெயர் ராமசாமி என்பவர் ரூ.33000 சீட்டில் 72 வாரமும், ரூ.50000 சீட்டில் 42 வாரமும், ரூ.60000

சீட்டில் 38 வாரங்களும் செலுத்தி இருந்ததாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். எனது மகன் இந்த புகாரை எங்கு வைத்து படித்து சொன்னார் என்றால் எனது வீட்டில் வைத்து படித்து சொன்னார்.

அந்தப் புகாரில் ராமலட்சுமி என்பவர் ரூ.50000 வாரட்சீட்டில் 2 சீட்டுக்களை 42 வாரம் செலுத்தியதாகவும், பொன்பாண்டி என்பவர் ரூ.50000 வாரசீட்டில் 5 சீட்டுக்களை 42 வாரம் செலுத்தியதாகவும், சாந்தி என்பவர் ரூ.50000 வாரசீட்டில் 1 சீட்டும் 42 வாரம் செலுத்தியதாகவும், சாந்தி என்பவர் ரூ.30000 வாரச்சீட்டில் 1 சீட்டை 52 வாரம் செலுத்தியதாகவும், குணசீலன் என்பவர் ரூ.61000 வாரசீட்டில் 6 சீட்டுக்களை 23 வாரம் செலுத்தியதாகவும், சொல்லப்பட்டுள்ளதா என்றால் ஆமாம்.

நான் செலுத்திய ரூ. 33000 வாரச்சீட்டில் எத்தனை பேர் இதுவரைக்கும் ஏலம் எடுத்தார்கள் என்றால் அது எனக்கு தெரியாது அந்த ஆட்களை எனக்கு தெரியாது. ரூ. 33000 வாரட்சீட்டில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது.

ரூ. 50000 வாரட்சீட்டில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. சீட்டு போட்டேன்.

ரூ. 60000 வாரட்சீட்டில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சீட்டு பணம் கொடுப்பேன்.

காவல் நிலையத்தில் புகார் எத்தனை மணிக்கு கொடுத்தார்கள் என்றால் சாயங்காலம் 5.00 மணிக்கு கொடுத்தார்கள். அன்றைக்கு எத்தனை மணிக்கு காவல் நிலையத்தில் இ,ருந்து வீட்டிற்கு வந்திருப்பேன் என்றால் 7.30 மணி இருக்கும். புகாரை யார் எழுதிக் கொடுத்தார்கள் என்றால் தெரியவில்லை.

ஒவ்வொருவரும் தனித்தனியாக புகார் கொடுத்தோம் என்றால் மொத்தத்தில் கொடுத்தோம்.

என்னிடம் போலிசார் எப்போது விசாரித்தார் என்றால் புகார் கொடுத்து இரண்டு மூன்று நாள் கழித்து போலிசார் வந்து விசாரித்தார்,

போலிசார் என்னை விசாரிக்கும்போது நான் மாயவன் கோவில் வரித்தாரர் இல்லை என்று சொன்னேன் என்றால் சரிதான். போலிசார் விசாரிக்கும்போது நாங்கள் எல்லோரும் புகார் கொடுக்கும்போது காவல் நிலையம் வந்தோம் என்று சொன்னேன் என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரிக்கும்போது காவல் நிலையம் வந்த நபர்கள் யார் என்று பெயர் மற்றும் தகப்பனார் , கணவர் பெயர் சொன்னேன் என்றால் இல்லை.

1ம் எதிரி மாயவன் என்ன வேலை செய்கிறார் என்று எனக்கு தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது.( சாட்சி தானாக, சீட்டு கட்டி பிறகும் அலையவைக்கிறார்கள் என்று அழுது கொண்டு சொன்னார்)

மாயவன் கோவில் நிர்வாகம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் சாட்சி 1ம் எதிரியை பார்த்து அவர்தான் நிர்வாகம் செய்கிறார் என்று சொன்னார்.

மாயவன் கோவிலில் இரண்டு பேர் நிர்வாகம் செய்கிறார்களா என்றால் அது எனக்கு தெரியாது.

யார் சீட்டு போடச்சொல்லி சீட்டு போட்டேன் என்றால் சாட்சி 1ம் எதிரியை காட்டி அந்த சாரை நம்பித்தான் சீட்டு போட்டேன் என்று சொன்னார்.

நான் சொல்வது போல் எதிரிகள் என்னிடம் சீட்டு போடச்சொன்னது கிடையாது என்றாலும் நான் எந்த சீட்டும் போட்டிருப்பது கிடையாது என்றாலும், அசா1ன் வேண்டுக்கோளுக்கு இணங்க அவர்கொடுத்த பொய் புகாருக்கு அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கி்றேன் சரியல்ல. நான் பொய்ய சொல்லவில்லை.

எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

1ம் எதிரி என்னை சீட்டு போட சொன்னது கிடையாது என்றாலும் நான் சீட்டு போட்டது இல்லை என்றாலும் சரியல்ல.

நாங்கள் சீட்டு பணம் கேட்டபோது எதிரிகள் எங்களை அசிங்கமாக பேசவில்லை என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல பேசினார்கள்.

1ம் எதிரி சீட்டு பணம் நடத்தவில்லை என்பதால் நான் சீட்டு பணம் கேட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல (சாட்சி அழுதுகொண்டே பிள்ளை படிக்க வைக்க முடியவில்லை என்று சொன்னார்.)

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

போலிசார் என்னை எங்குவைத்து விசாரித்தார் என்றால் ஊரில் வைத்து விசாரித்தார். என்னை தனிப்பட்ட முறையில் விசாரித்தார்களா என்றால் என்னிடம் விசாரித்தார்கள். எல்லோரையும் தனித்தனியாக விசாரித்தார்களா என்றால் தனித்தனியாக மொத்தமாக இருந்தோம் ஆஜர் எதிரிகள் சீட்டு ரூபாய் எப்படி வாங்குவாய் என்று சொன்னார்கள், நீ எப்படி வாங்குவாய் என்று பார்ப்போம் என்று சொன்னார்கள். நான் பொய் சா்ட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னை விசாரித்ததாக சொல்லும்போலிசார் ஆண் போலிசா, பெண் போலிசா என்றால் ஆண் போலிஸ் விசாரித்தார்.

ரூ.50000 வார சீட்டில் நான் 42 வாரங்கள் சீட்டு செலுத்தினேன் என்றும் ரூ.49 ஆயிரத்தி சில்லறை செலுத்தி உள்ளேன் என்றும் நான் முதல் விசாரணையில் சொன்னதை நான் போலிஸ் விசாரணையின்போது சொன்னேனா என்றால் ஆமாம்.

ரூ.33000 சீட்டில் எத்தனை வாரங்கள் என்றால் 111 வாரங்கள்

ரூ.50000 சீட்டில் எத்தனை வாரங்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை 42 வாரங்கள் செலுத்தியுள்ளேன்.

ரூ.60000 சீட்டில் எத்தனை வாரங்கள் என்றால் அது எனக்கு தெரியவில்லை. நான் 38 வாரங்கள் ரூபாய் 11 ஆயிரத்தி சில்லறை செலுத்தினேன்.

ரூ.60000 சீட்டில்மொத்தம் எத்தனை வாரங்கள் என்று தெரியாது என்று போலிசாரிடம் சொன்னேனா என்றால் நான் பீடி சுற்றி சீட்டு போட்டேன். எத்தனை வாரங்கள் என்று இப்போது எப்படி தெரியும்.

ரூ.50000 சீட்டில் எவ்வளவு ரூபாய் செலுத்தினேன் என்றால் ரூபாய் 69 ஆயிரத்தி சில்லறை செலுத்தினேன், மொத்தம் ஒன்றரை லட்சம் அளவில் பணம் செலுத்தினேன்.

ரூ.33000 சீட்டில் வாரம் எவ்வளவு தொகை என்றால் ரூபாய் 300.

ரூ.50000 சீட்டில் வாரம் எவ்வளவு தொகை என்றால் ரூபாய் 500.

ஒவ்வொரு வாரச்சீட்டிலும் ஏலக்கழிவு போகும் என்றால் சரிதான். கழிவுத்தொகையை எங்களிடம் கொடுத்துவிடுவார்கள் என்றால் சரிதான். கழிவுத்தொகை என்பது ஒவ்வொரு சீட்டுக்கும் பொருந்தும் என்றால் சரிதான். நான் எத்தனை சீட்டு எடுத்துள்ளேன் என்றால் நான் சீட்டு எடுக்கவில்லை. நான் ஏலம் கேட்க போனேனா என்றால் நான் போக வில்லை. நான் சீட்டு கேட்கவில்லை. தேவை இருந்ததால் தான் சீட்டு கேட்போம்.

ஏலம் எடுத்த நபர் அதற்கு மறு வாரத்தில் இருந்து முழுத்தொகையை செலுத்தவேண்டும் என்றால் சரிதான். அவருக்கு கழிவு கிடையாது. ஒவ்வொரு வாரச்சீட்டிலும் இரண்டாவது சீட்டு கோவிலுக்குதான் என்றால் சரிதான். அதனால் தான் சீட்டு கோவிலில் வைத்து நடந்தது என்றால் சரிதான். ஒரு நபர் ஒரு சீட்டு எடுத்த பின்பு அதே வாரச்சீட்டில் அடுத்த சீட்டு எடுக்க முடியுமா என்றால் இல்லை. நம்பிக்கை இருந்தால் கொடுப்பார்கள். ஒவ்வொரு வாரமும் எவ்வளவு கழிவு என்று எனக்கு தெரியும் என்றால் எனது சீட்டில் தெரியும். அவ்வாறு கழிவு எவ்வளவு போகும் என்று எழுதிவைத்து போலிசாரிடம் கொடுத்தேன் என்றால் சரிதான். ஏலம் எடுத்த நபருக்கு ஏலம் எடுத்த உடனே கோவிலில் வைத்து சீட்டு பணம் கொடுத்துவிடுவார்கள் என்றால் சரிதான். நான் சீட்டு பணம் செலுத்திய மேற்சொன்ன தொகை விவரத்தை தற்போது தான் முதலில்

நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றால் சரிதான். ரூ.33000 சீட்டில் 72 சீட்டுக்கு பிறகு மீதியுள்ள சீட்டுத்தொகையை சீட்டு பணம் எடுத்தவர் செலுத்தவில்லை என்றால் ஆஜர் எதிரிகள் பிரித்தால்தானே செலுத்தவார்கள். அதற்கு பிறகு அவர்கள் சீட்டு பிரிக்கவில்லை.

ரூ.50000 சீட்டில் 42 சீட்டுக்கு பிறகு மீதியுள்ள சீட்டுத்தொகையை சீட்டு பணம் எடுத்தவர் செலுத்தவில்லை என்றால் சரிதான்.

ரூ.60000 சீட்டில் 38 சீட்டுக்கு பிறகு மீதியுள்ள சீட்டுத்தொகையை சீட்டு பணம் எடுத்தவர் செலுத்தவில்லை என்றால் சரிதான்.

நான் சொல்வது போல் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் 2ம் எதிரியோ அவருக்கு வேண்டப்பட்டவர்களோ யாரும் தனிப்பட் ட முறையில் சீட்டு நடத்தவில்லை என்றாலும் சரியல்ல.

ரூபாய் 33000 சீட்டு எப்போது ஆரம்பித்தார்கள் என்றால் 2018

ரூபாய் 50000 சீட்டு எப்போது ஆரம்பித்தார்கள் என்றால் 2018

ரூபாய் 60000 சீட்டு எப்போது ஆரம்பித்தார்கள் என்றால் 2018

1ம் எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை 2ம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

சாட்சி தானாக இப்படி எல்லாம் ஆகும் என்று தெரிந்திருந்தால் சீட்டு பணம் கொடுத்திருக்க மாட்டேன் என்று சொன்னார்.

இப்படி எல்லாம் ஆகும் என்று தெரிந்திருந்தால் சீட்டு பணம் கொடுத்திருக்க மாட்டேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் நான் சீட்டு பணம் கொடுத்த பிறகும் என்னை மருக விட்டு விட்டார்கள். நாங்கள் சீட்டு பணம் கேட்கும்போது சீட்டு எடுத்த நபர்களிடம் சீட்டை பிரித்து தாருங்கள் என்று கேட்டோம் என்றால் நாங்கள் செலுத்திய பணத்தை தாருங்கள் என்று கேட்டோம்.

நாங்கள் செலுத்திய பணத்தை தாருங்கள் என்று கேட்டோம் என்று இந்த வழக்கிற்காக பொய்யா சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi